**தலைப்பு - 9 – நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை**

----------------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

------------------

## 1.1 அபிப்பிராயம்

------------------

நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீட்டு நியாயசபைக்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிருவாக மேன்முறையீட்டு நியாயசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

----------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1)

பிரிவின் பிரகாரம் நியாயசபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,200 ஆன கட்டுநிதி மீதி திறைச்சேரிக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி காணப்படாதிருந்த போதிலும் அதிகார சபையினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 19,200 என காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரான கட்டுநிதி மீதி ரூபா 19,200 சரியாக திறைச்சேரிக்கு மாற்றப்பட்டது. அக் கட்டுநிதி மீதி நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்படாமை கணக்கு இணக்கம் செய்வதற்காக அது தேவைப்பட்டமையினாலாகும்.நிதி நிலைமை கூற்று தயாரித்தல் மேற்கொண்டமை அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் கணக்கு உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பணிமனையின் போது கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் என மேலதிகமாக தெரிவிக்க விரும்புகின்றேன். | நிதிச் செயலாற்றல் கூற்றில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதி சரியாக குறிப்பிடப்பட வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் கொவிட் தொற்று காரணத்தினால் செலவினம் குறைந்தமை காரணத்தினால் மீண்டெழும் செலவின விடயங்கள் 03 ஆனது 77 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தது. மூலதன செலவின விடயங்கள் 02 இன் கூட்டுத்தொகை ரூபா 170,000 ஆன முழுமையான நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டது சாதாரண நிலையின் கீழ் ஏற்பதற்கு நேரிடும் செலவினத்தினை கணித்தாகும். 2021 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலை மற்றும் பதவியணி குறைப்பாடு பிரகாரம் மதிப்பிடப்பட்ட செலவினம் ஏற்படுவதற்கு நேரிடவில்லை. | நிதி பிரமாணம் 50 பிரகாரம் செலவினம் மதிப்பிடு தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்களள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் வரைவு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்காய்வு அறிக்கை இந்த மேன்முறையீட்டு நியாயசபைக்கு பெறப்பட்டதன் பின்னர் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அதிகார சபையினால் மீளாய்வாண்டிற்காக மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எல்லைக்கு உட்பட்ட பதவியணி மற்றும் கொவிட் 19 தொற்று நிலையினால் 2021 ஆம் ஆண்டினுள் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று | சுற்றறக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | செயற்படுத்துவதற்கு கடினமாகியது. எவ்வாறெனெனினும் 2022 ஆம் ஆண்டில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------

3.1 **திட்டமிடல்**

**--------------**

| **<u>கணக்காய்வு அவதானிப்புக்கள்</u>** | **<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அரசின் அனைத்து நிறுவனங்களாலும் அனைத்து ஆண்டுகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்று நிலைமையினுள் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்து கடினமாக இருந்தது. 2022 இற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | அனைத்து ஆண்டுகளுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை செயற்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ பலவீனங்கள்**

**-----------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுனிள்றன.

| | **<u>கணக்காய்வு அவதானிப்புக்கள்</u>** | **<u>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|---|
| (அ) | 2002 இன் 04 ஆம் இலக்க நிருவான மேன்முறையீட்டு நியாயசபை சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம், சபைக்கு முன்வைக்கப்படுகின்ற ஏதேனும் மேன்முறையீடொன்று அது பெறப்பட்ட திகதி தொடக்கம் 02 மாதங்களினுள் பரீட்சித்து ஏதும் தகுதியானதொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், சபைக்கு மேன்முறையீடொனற்று | முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கபடும் போது 02 மாதங்களினுள் பரீட்சித்து பூர்த்தி செய்வதற்குரியதாயினும் எதிர்பார்க்கப்படாது எழுகின்ற விடயங்கள் மற்றும் பல எண்ணிக்கையிலான மேன்முறையீடுகள் 02 மாதங்களினுள் பரீட்சித்து தீர்மானம் பெற்றுக் கொடுத்தல் பிரயோகமானதன்று. மேன்முறையீடு பரீட்சிக்கும் போது மற்றும் தீர்மானம் பெற்றுக் | சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு முன்வைக்கப்படுகின்ற ஏதும் மேன்முறையீடொன்று அது பெறப்பட்ட திகதி தொடக்கம் 02 மாதங்களினுள் பரீட்சித்து ஏதும் தகுதியானதொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறில்லையெனில் அப் பிரிவினை திருத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்டு 02 மாதங்களினுள் பரீட்சித்து பூர்த்தி செய்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படாததுடன் சட்டத்தின் அந்த பிரிவு இது வரையில் திருத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கும் போது மூவரினை கொண்ட நியாயசபையின் தொடர்ச்சியான பங்கேற்பு அத்தியாவசியமானதாகும். சபை சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீடொன்று பெற்றுக் கொண்ட திகதி தொடக்கம் 02 மாதங்களினுள் பரீட்சித்து பூர்த்தி செய்தல் தொடர்பாக உள்ள பிரிவினை திருத்துவதற்கு தேவையொன்று காணப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நடவடிக்கை எடுப்பதற்கு காணப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 929 ஆனதுடன் சபையினால் அம் மேன்முறையீடுகளின் கால பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணி குறைப்பாட்டின் காரணத்தினால் இவ்வாறான எண்ணிக்கை பகுப்பாய்விற்காக உத்தியோகத்தரொருவர் வழங்குவதில் சிக்கல்கள் காணப்பட்டது. எவ்வாறெனினும் 2022 இற்காக இந்த வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுப்பதற்கு காணப்படுகின்ற மேன்முறையீடுகளின் கால பகுப்பாய்வு பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

-----------------

### 4.1 பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்

------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுமக்களின் தேவை மற்றும் நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அல்லது பாராட்டுக்கள் இடுகையிடுவதற்கான உத்தியோகப்பூர்வ வலைத்தளம் ஊடாக வசதி இருக்க வேண்டுமெனினும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது திறைச்சேரியின் தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோசனை பிரகாரம் நிறுவனத்தின் ICTA ஊடாக உத்தியோகப்பூர்வ வலைத்தளமொன்று நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொதுமக்களின் தேவை மற்றும் நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அல்லது பாராட்டுக்கள் இடுகையிடுவதற்கு உத்தியோகப்பூர்வ வலைத்தளம் ஊடாக வசதியளிக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்தும்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு தகவல்கள் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 31 ஆகவிருந்த போதிலும் உள்ளவாரான பதவியணி 19 ஆக காணப்பட்டமையினால் பதவியணி வெற்றிடம் 12 ஆக காணப்பட்டது. | உங்கள் அவதானிப்புடன் இணங்குகினறேன். வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு அரச சேவை உட்பட சிவில் சமுதாயத்திற்கு உயர்ந்தபட்ச சேவையொன்று பெற்றுக் கொடுப்பதற்காக இந்த சபை குறித்த நிறுவனங்களுடன் செயற்படுமென குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன. | வெற்றிடஙங்கள் நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |